# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

**தலைமைக் கழகம்**

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 04.10.2022

## தலைமைக் கழக செய்தி வெளியீடு

உயிரை விட கொண்ட கொள்கையும் லட்சியமும் பெரிது என செயலில் நிரூபித்து, தாங்கிப் பிடித்த கொடிக்காக காந்திய வழியில் தன் இன்னுயிரையும் கொடுத்த **தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் பிறந்த நாள்** இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி **கழக பொதுச்செயலாளர் திரு. டிடிவி தினகரன் அவர்களின் சார்பில் திருப்பூர் இரயில் நிலையம் அருகில்** உள்ள கொடி காத்த குமரன் அவர்களின் **மணிமண்டபத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு** கழக துணை பொதுச்செயலாளரும், திருப்பூர் புறநகர் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான **திரு.C.சண்முகவேலு,** கழக அமைப்பு செயலாளரும், கோவை மேற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.R.துரைசாமி (எ) சேலஞ்சர்துரை,** கழக அமைப்பு செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.மா.பா.ரோகினி கிருஷ்ணகுமார்,** கழக தேர்தல் பிரிவு துணை செயலாளரும், திருப்பூர் மாநகர் மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் மேயருமான **திருமதி.A.விசாலாட்சி,** கோவை மத்திய மாவட்ட கழக செயலாளர் **திரு.N.R.அப்பாதுரை,** திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் **திரு.N.ஆனந்தகுமார்,** கழக மருத்துவர் அணி துணைச்செயலாளர் **டாக்டர்.கா.கிங் நார்சிஸஸ்** ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




**தலைமைக் கழகம்**

**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**

இதனைத் தொடர்ந்து, **ஈரோடு மாவட்டம், சிவகிரியில் அமைந்துள்ள திருப்பூர் குமரன் அவர்களின் திருவுருவச்சிலைக்கு** கழக துணை பொதுச்செயலாளரும், திருப்பூர் புறநகர் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான **திரு.C.சண்முகவேலு,** ஈரோடு மாநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் **திரு.A.M.சிவபிரசாந்த்,** ஈரோடு மாநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் ஈரோடு **திரு.V.வெங்கடேசன்,** ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் **திரு.S.சரவணக்குமார்** ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட/வார்டு, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**